# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-45000032 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:109:2023 நாள்: 24.03.2023

<u>சென்னை பிராந்தியங்களைச் சார்ந்த தோழர்களுக்கு:</u>

அன்பார்ந்த தோழர்களே,

## <u>சங்கத்தின் பொன்விழா</u>

நமது சங்கத்தின் பொன்விழா 22.04.2022 அன்று சிறப்பாக துவங்கி, ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது. முத்தாய்ப்பாக, பொன்விழா மாநாடு கடந்த நவம்பர் 20, 21 தேதிகளில் சென்னையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அம்மாநாட்டில், கடந்த 50 ஆண்டுகளில் சங்கப்பணியாற்றிய அனைத்து நிர்வாகிகளும் சிறப்பிக்கப்பட்டு, அனைத்து உறுப்பினர்களின் சார்பாக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் பொன்விழா நிறைவுபெறவுள்ளது. அதனையொட்டி, சங்கத்தின் அமைப்பு தினமான 22.04.2023 அன்று ஒரு நிறைவு விழாவிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிகழ்வில் சென்னையிலுள்ள நமது உறுப்பினர்கள் அனைவரும், அவர்களது குடும்பத்தாருடன் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். விழா கீழ்க்கண்டபடி நடைபெறவுள்ளது.

**இடம் : அனிதா மெட்ரிக்குலேஷன் பள்ளி அரங்கம், 5/6, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, பெரியமேடு, சென்னை - 600 007.**

**நாள் : 22.04.2023 (சனிக்கிழமை)**

**நேரம் : மாலை 3 மணி முதல்**

**உணவு: இரவு 8 மணி**

இந்த விழாவில் அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர்.**N.சங்கர்** அவர்களும், சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர்.**E.அருணாச்சலம்** அவர்களும், வங்கியின் களப் பொதுமேலாளர் திரு.**R.விஸ்வேஸ்வரன்** அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, நமது உறுப்பினர்கள், அவர்களது குடும்பத்தார்களின் கலை, இலக்கியம் சார்ந்த திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. கவிதை, பாட்டு, நடனம், குறுநாடகம், இசைக் கருவி வாசித்தல், பலகுரல், நகைச்சுவை, கராத்தே, சிலம்பம், ஓரங்க நடிப்பு போன்றவைகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தலாம். விருப்பமுள்ள தோழர்கள் கீழ்வரும் தோழர்களை 06.04.2023க்கு முன்பாக அணுகும்படி கேட்டுக்கொள்கிறோம்:

தோழர். V.இளவரசன் : 9790841604

தோழர். P.கணேசன் : 8531040100


தோழர். J.விஜயலட்சுமி : 9841483210

தோழர். S.ஆர்த்தி : 9884708021

இறுதியாக, நமது முன்னாள் தோழர்.**P.ஆல்பர்ட்ராஜ்** குழுவினரின் நாட்டுபுற கலை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

வழக்கம்போல, 20.04.2023 (வியாழக்கிழமை) அன்று, சென்னை பிரதான கிளை வளாகத்தில் குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது. தகுதியுள்ள உறுப்பினர்கள் அனைவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, குருதிக்கொடை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தோழமை வாழ்த்துகளுடன்,



**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**